# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 82/2013 | Date : 19.03.2024 | PW2 |
|---|---|---|
| Name: ராஜேந்திரன் | S/o. கந்தசாமி | |
| Evidence Recorded Time: 3.05 P.M. to 3.25 P.M | | |

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு எதற்காக போடப்பட்டது என்பது தெரியும். எமரால்டு இடம் வேல்முருகன் ஒரு அக்ரிமெண்ட் போட்டார்.6 லட்ச ரூபாய்க்கு விலை பேசி 5 1/2 பணம் கொடுத்து விட்டார். பாக்கி 50 ஆயிரத்தை கிரையம் செய்யும் போது கொடுப்பதாக பேசப்பட்டது. கொடுக்காததால் வழக்கு போட்டுள்ளார். கிரைய ஒப்பந்தத்தில கையெழுத்து தமிழில் போட்டேனா ஆங்கிலத்தில் போட்டேனா என்றால் ஆங்கிலத்தில் போட்டேன். அதில் என் தந்தை பெயர், முகவரி நானே எழுதினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் ராஜேந்திரன் என்ற பெயருக்கும் த/பெ கந்தசாமி மற்றும் முகவரி எழுதப்பட்ட எழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் வித்தியாசம் இல்லை. தமிழில் எழுதப்பட்ட ராஜேந்திரன், த/பெ.கந்தசாமி மற்றும் முகவரியை நான் தான் எழுதினேன் என்று சொன்னால் நான் தான் எழுதினேன். கையெழுத்தை என் வீட்டில் போட்டேனா, வேல்முருகன் வீட்டில் போட்னோ என்றால் எமரால்டு வீட்டில் போட்டேன். தாவா சொத்து ரங்கநாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு பத்திரம் நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. 03.06.2012 ம் தேதியில் தான் பேசி முன் பணம் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அன்றைய தேதியில் பேசியது, முன்பணம் கொடுத்தது அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். யாரிடம் விலை பேசினார், யார் விலை சொன்னார்கள் என்றால் எமரால் டு விலை சொன்னார், வேல்முருகன் விலை கேட்டார். அந்த சமயத்தில் ரங்கநாதன், ராஜகுமாரி, ஆகியோர் இருந்தார்களா என்றால் ரங்கநாதன் இருந்தார். எத்தனை ரூபாய்க்கு விலை சொன்னார் என்பது தெரியுமா என்றால் எவ்வளவு சொன்னார் என்று தெரியாது 6 லட்ச ரூபாய்க்கு விலை பேசி முடித்தது தெரியும். விலை பேசி முடித்ததும் 5 1/2 லட்சம் கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்துவிட்டார். மேற்படி அக்ரிமெண்ட்டில் பிரதிவாதிகள் இருந்தார்கள் என்றும் ரங்கநாதன் கையொப்பம் செய்தார்களா என்றால் செய்தார்கள். சாட்சி தற்போது ரங்கநாதன் இருந்ததாக தெரிவிக்கிறார். எத்தனை மணிக்கு நான் கையொப்பம் செய்தேன் என்றால் காலையில் கையொப்பம் போட்டேன். நேரம் சரியாக தெரியவில்லை. விலை பேசி முடித்தவுடன் ஒப்பந்தத்தை யார் டைப் செய்து வந்தார் என்றால் விலை பேசியது தான் தெரியும். டைப் எப்போது செய்தார்கள் என்று தெரியாது. விலைபேசி முடித்த 10 நிமிடத்தில் கையொப்பம் செய்தேன் என்றால்

சரிதான். நான் கையெழுத்து போட்டு 2 மாதத்திற்குள் இந்த தாவா தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் அது பற்றி தெரியாது. ஒப்பந்த பத்திரம் எவ்வளவு ரூபாய் பத்திரம் என்றால் 100 ரூபாய் பத்திரம் ஆகும். எமரால்டு வெங்கடாஜலம் , அவரது மனைவி, வேல்முருகன் மற்றும் நான் ஆகியோர் கூட்டு சதி செய்து இந்த தாவாவை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக ஒப்பந்தத்தை மோசடியாக தாயர் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் , வேல்முருகன், எமரால்டு வெங்கடாஜலம் ஆகியோர் அனைவரும் அதிமுக வை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வேல்முருகன் சாப்பாட்டிற்கு கஷ்டப்படுகிறார் என்றும் அவரால் 5 1/2 லட்சம் கொடுக்கும் அளவுக்கு வருமானம் இல்லை என்றும் நானும் வேல்முருகனும் எமரால்டு என்பவரின் கையார் என்றால் சரியல்ல. அக்ரிமெண்ட்டில் கையொப்பம் போட்ட அன்று பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ரங்கநாதனின் சொத்து என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் எமரால்டு வெங்கடாஜலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஓம்/– PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.